*17*

# மாபெரும் கலிலேய ஊழியம்

## *கலிலேயாவுக்குத் திரும்பியதிலிருந்து கூடாரப் பண்டிகை வரையில்*

**அறிமுகம்.**—*அ. காலமும் இடமும்.*—இந்தக் கால கட்டமானது - இயேசுவின் (மொத்த) ஊழிய காலத்தில் பாதிக்கும் மேற்பட்டதான—ஒராண்டும் ஒன்பது மாதங்களும் கொண்டதாக உள்ளது. இதன் தொடக்க மாதங்களில் இயேசு ஒரே ஒரு முறை எருசலேமுக்குச் சென்றிருந்தார். இதன் கடைசி ஆறு மாதங்கள் கலிலேயாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பின்னடைதல்களின் வரிசைத் தொடரினால் குறிக்கப் பட்டன. இந்த எதிர்பார்ப்புகளுடன் கலிலேயா காட்சியாகவும் கப்பர்நகூம் மையமாகவும் இருக்க, கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய முக்கிய பகுதி அமைகின்றது.

*ஆ. இயல்பு.*—இது பின்வருவனவற்றின் காலகட்டமாய் இருந்தது: (1) மிக வலுவான செயல்பாடு. இது பயணங்கள், அன்பு மற்றும் வல்லமை யின் அற்புதங்கள், வெளிப்படையான உரைகள் மற்றும் தனிப்பட்ட போதனைகள் ஆகியவற்றினால் நிரம்பப் பெற்று, அடிக்கடி இரவில் வெகு நேரம் கழித்து ஓய்வெடுக்கச் செல்லுதல் அல்லது அதிகாலையில் ஜெபிக்கச் செல்லுதல் ஆகியவற்றைக் கொண்டதாயிருந்தது. (2) மக்கள் கூட்டங்களில் பிரபலமாகுதல். எல்லாப் பகுதிகளிலும் எல்லா வகுப்புகளிலும் இருந்து வந்த மக்கள் கூட்டம் அவரது வசனங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, சாட்சியளித்து அல்லது தாங்களே நேரடியாக அனுபவப்பட்டிருந்தனர், எனவே அவர் பெரும்பாலும் கிராமப் புறத்தில் இருக்கும்படி அவரது வழியை அவர்கள் நகரங்களில் இடைமறித்தனர். (3) வேதபாரகர், பரிசேயர்கள் மற்றும் கடைசியில் ஏரோது அந்திப்பா ஆகியோரின் வெறுப்புணர்வு வளர்ந்தது. (4) இவ்வூழியத்தின் முடிவு மாதங்களில், மக்களிடத்தில் புகழ்ச்சி குறைந்து, அதன் விளைவாகக் கலிலேயாவிலிருந்து விலகிச் செல்லுதல்.

## I. முதல் அல்லது தயாரிப்பு நிலை — சீஷர்களை இரண்டாம் முறை அழைப்பது வரை

***1. நாசரேத்தூரில் புறக்கணிக்கப்படுதல்*** (லூக். 4:14-30).—பையனா யிருந்த இயேசு நன்கு அறியப்பட்டு அன்புகூரப்பட்ட கிராமம் ஒன்று கலிலேயாவில் உள்ளது என்று ஒருவர் நினைக்கக் கூடும். இயேசு தாம்

*ஞானஸ்நானம் பெறுவதற்காக நாசரேத்தூரிலிருந்து புறப்பட்டுச் சென்று ஒரு முழு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. இப்பொழுது அவர், எருசலேமில் செய்திருந்தது போன்றே நாசரேத்தில் உள்ள மனிதர்களுடைய விசவாசத்திற்குத் தம்மைக் கையளிப்பதற்காக வந்தார். வழியில் அவர் (கப்பர்நகூமில் இருந்த) ராஜாவின் மனிதனுடைய மகனைக் கானாவூரில் இருந்தபடியே குணப்படுத்தி அங்கு இரண்டாம் அற்புதத்தைச் செய்தார் (யோவா. 4:46-54), மற்றும் அநேகமாக அவர் தாம் சிறுவயதில் வளர்ந்த இடத்திற்குச் செல்லும் பயணத்தின்போது போதித்திருப்பார். நாசரேத்தூரில் ஏற்பட்ட விளைவு எருசலேமில் ஏற்பட்டதைப் போன்றதாகவே இருந்தது. இந்த இளம் தச்சர்,—இவர்களுக்குப் போதிக்க அதிகாரம் இவருக்கு எங்கிருந்து வந்தது? இயேசு முப்பது ஆண்டுகளாக யார் மத்தியில் வாழ்ந்திருந்தாரோ, அம்மக்களே அவரது உயிரைப் போக்க வகை நாடினார்கள் என்பது அம்மனிதர்கள் (மணக் கண்) பார்வையற்ற தன்மையின் மீதான கவலைக்குரிய விளக்கவுரையாக உள்ளது.*

***2. கப்பர்நகூம் தேர்ந்தெடுக்கப்பட்டது*** *(மத். 4:12-16).—இயேசு நாசரேத்தை விட்டு கப்பர்நகூமுக்கு வந்தார். கலிலேயாக் கடலின் வடமேற்குக் கடற்கரையில் இருந்த மக்கள் தொகையும் வர்த்தகமும் மும்முரப்பட்டிருந்த இந்த மையமானது மாபெரும் கலிலேய ஊழியத்திற்கு மையமாக நன்கு தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தது. ஏறக்குறைய இரு ஆண்டுகள் அளவாக இயேசு இவ்விடத்தில் பல வாரங்களுக்கு ஒரு போதும் இல்லாதிருக்கவில்லை என்று காணப்படுகின்றது. அவர் கப்பர்நகூமிலிருந்து தமது (ஊழியப்) பயணங்களை அமைத்துக் கொண்டார்; அவ்விடத்திற்கு அவர் திரும்பி வந்தார். இந்தக் காலகட்டம் முழுவதிலும் அவருக்கு இருப்பிடம் ஏதேனும் இருந்தது என்று கூறப்படுமென்றால் அது இங்குதான் (கப்பர்நகூமில்தான்) இருந்தது.*

***3. அற்புதமான மீன் பிடித்தலும் சீஷர்களை இரண்டாம் முறை அழைத்தலும்*** *(மத். 4:18-22; லூக். 5:1-11).—கப்பர்நகூமில் (சீஷர்களை) தேர்ந்தெடுத்து சற்றுக்காலத்திற்குப் பிறகு, இயேசு சீஷர்களை இரண்டாம் முறை குறிப்பிடத்தக்க விதத்தில் அழைத்தார். இது அவர்கள் யாவரையும் மிக ஆழமாக மனதில் பதிய வைக்குமளவுக்கு அற்புதமாய் ஏராளமான மீன்களைப் பிடித்த செயலின் தொடர்பாக நடைபெற்றது. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் மீனவர்களாய் இருந்தனர். அவர்களில் மூவர், முதல் ஐந்து சீஷர்களின் குழுவில் இருந்தனர் (யோவா. 1:35-42). இந்தப் பிந்திய அழைப்பானது முந்திய அழைப்பில் இருந்து இரண்டு அம்சங்களில் மாறுபடுகின்றது: இது அவர்களை இயேசுவுடன் அதிகம் நிலைப்புத்தன்மையுடன் இணைத்து வைத்தது, மற்றும் இது ஊழியத்திற்கான தனிச் சிறந்த அழைப்பாக இருந்தது. அவரைச் சுற்றியிருந்த இந்தக் கூட்டமானது அதிகம் நிலைப்புத் தன்மை கொண்ட சீஷர்களின் அமைப்பாக, எதிர்கால அப்போஸ்தலர்களின் முளைக் கருக்களாக இருந்தது, இது தயாரிப்பு நிலையின் முடிவைக் குறிக்கின்றது.*

## II. இரண்டாம் நிலை - அப்போஸ்தலர்களை நியமித்தல் வரை மற்றும் மலைப்பிரசங்கம்

***1. கப்பர்நகூமில் நினைவுகூரத் தக்க ஒரு ஓய்வுநாள்*** *(மாற்கு 1:21-34).—இயேசு தமது நான்கு சீஷர்களுடன் கப்பர்நகூமுக்குத் திரும்பினார், மற்றும் உடனே அவர் மிக வலுவான செயல்பாடுள்ள வெளிப்படையான ஊழியத்தினுள் பிரவேசித்தார். ஜெப ஆலயத்தினுள் சென்ற அவர், "அவர்கள் பிரம்மித்துப் போகுமளவு" அப்படிப்பட்ட அதிகாரத்துடன் போதித்தார். ஆனால் அசுத்த ஆவி கொண்ட ஒருவரை அங்கு அன்று அவர் குணமாக்கியதுதான் அவர்களிடையே அதிகத் திகைப்பை ஏற்படுத்தியது. இது கப்பர்நகூமில் இயேசுவின் முதல் அற்புதமாக இருந்தது, மற்றும் அசுத்த ஆவி பிடித்தவர்களைக் குணப்படுத்தியது பற்றிய முதல் பதிவாக இருந்தது. அந்தகாரத்தின் இரகசிய சக்திகளின் மீதான இந்த வெற்றிகளைக் காட்டிலும் மக்கள் வேறெந்த அற்புதம் செய்யப்பட்ட போதும் அதிகம் வியப்படைந்த தாகக் காணப்படுவதில்லை (இ.வ. லூக். 4:36, 37; 10:17). இதைத் தொடர்ந்து அவர் பேதுருவின் மாமியை அப்பெண்மணியின் இல்லத்திலேயே குணமாக்கினார், மற்றும் பல்வேறு வியாதிகளால் துன்புற்று உதவி செய்யும் கரங்களால் அவரிடம் கொண்டு வரப்பட்ட திரளான கூட்டத்தாரை சூரியன் மறையும் வரையில், ஓய்வு நாள் முடியும் வரையில் குணமாக்கிக் கொண்டிருந்தார்.*

***2. கலிலேயாவில் மாபெரும் பயணம்*** *(மாற். 1:35-45).—அடுத்த நாள் காலையில் மிக முன்னதாக (எழுந்து) தனிப்பட்ட ஜெபத்திற்காக நழுவிச் சென்ற இயேசு அவர் தம் சீஷர்களால் பின் தொடரப்பட்டார். கூட்டத்தைத் தவிர்ப்பதில் மும்முரமாயிருந்த நிலையில் அவர் கலிலேயாவில் விரிவாகப் பயணம் செய்து, இராஜ்யத்தின் நற்செய்தியை எங்கும் பிரசங்கித்துக் கொண்டு எல்லா இடங்களிலும் பல்வேறு வியாதிகளைக் குணமாக்கிக் கொண்டு வந்தார். நாடு முழுவதும் உணர்வெழுச்சியின் உற்சாகத்தில் இருந்தது; பலஸ்தீனத்தின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரிடம் வந்தனர் (மத். 4:24, 25). தொழு நோயாளி ஒருவரைக் குணமாக்கிய விவரம் ஒன்றில் மட்டுமே அற்புதம் பற்றிய நிகழ்ச்சி விரிவாகத் தரப்படுகின்றது.*

***3. ஒரு திமிர்வாதக்காரரைக் குணமாக்குதல்—எதிர்ப்பின் தொடக்கங்கள்*** *(மாற்கு 2:1-12).—மக்கள் கூட்டத்தின் மத்தியில் இயேசுவின் புகழானது ஒரு முழு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவுக்குத் தொடர்ந்தது. ஆனால் விரைவிலேயே பழக்கவழக்கங்களின் பாதுகாவலர்கள் ஆகிய வேதபாரகர், பரிசேயர்களிடமிருந்து வெறுப்புணர்வின்/பகைமையுணர்வின் முறுமுறுத்தல் கேட்கப்பட்டது. ஒரு திமிர்வாதக்காரரைக் குணமாக்கியது தொடர்பாக அவர்களின் விமர்சனம் எழும்பிற்று. இந்த வேளையிலிருந்து, எருசலேம் மற்றும் எங்குமுள்ள அதிகாரிகளின் ஒற்றர்கள் அவருடைய அடிவைப்புகளில் மோப்பம் பிடிக்க விடாது பின்தொடர்ந்தார்கள்.*

***4. மத்தேயுவை அழைத்தலும் அவரது விருந்தளிப்பும்*** *(மத். 9:9-13; லூக்.*

*5:27-32).—*இயேசுவைச் சுற்றிச் சூழ்ந்திருந்த மக்களின் வகுப்பு நிலையானது மேல் தட்டு மக்களின் குற்றச் சாட்டிற்கான இன்னொரு காரணமாயிற்று. ஒரு வகுப்பார் என்ற முறையில் ஆயக்காரர்கள் பேராசையும் பணம் பறிக்கும் தீய குணமும் கொண்டவர்களாய் இருந்தனர்; மற்றும் அவர்கள் ரோம அரசின் கருவிகளாயிருந்த காரணத்தினால் யூதர்களால் இழிவாகக் கருதப்பட்டார்கள். இவர்களில் ஒருவரான மத்தேயு அல்லது லேவி இயேசுவின் சீஷரானார், மற்றும் இவர் தம் எஜமானருக்காக ஒரு விருந்தை ஏற்பாடு செய்தார், அவ்விருந்தில் கலந்து கொள்ளும்படி பல ஆயக்காரர் களும் பாவிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்"[1] என்ற அழகிய கூற்றை நாம் பெறுவதற்கு, பரிசேயர்களின் விமர்சனத்திற்கே கடன் பட்டவர்களாய் இருக்கின்றோம்.

***5. யாவீருவின் மகள்—இடைநிலை அற்புதம்*** *(மாற்கு 5:22-43).—* இயேசு, வியாதி, இயற்கை மற்றும் அசுத்த ஆவிகள் மீதான தம்முடைய வல்லமையை/அதிகாரத்தைக் காண்பித்திருந்தார். மரணத்தின் மீதான அவருடைய அதிகாரத்தை செயல்விளக்கப்படுத்துவது நிலைத்திருந்தது. மத்தேயு அளித்த விருந்தில் (இயேசுவின்) உரையின் போதோ அல்லது அதைத் தொடர்ந்தோ, கப்பர்நகூம் ஜெப ஆலயத் தலைவர், மரணத் தருவாயிலிருந்த தம் மகளுக்காக வேண்டுதல் செய்ய அங்கு வந்தார். இப்படிப்பட்ட அழைப்புக்கு இயேசு ஒருபொழுதும் செவி கொடுக்காமல் இருந்ததில்லை. இதற்காகப் புறப்பட்டுச் செல்லும் வழியில் பெரும்பாடுள்ள பெண் ஒருத்தியின் இரத்தப் போக்கு குணமடைதல் நடைபெற்றது - இது இடைநிலை அற்புதம் என்ற தக்க வகையிலான பெயரால் குறிக்கப்பட்டது. அவர்கள் யாவீரின் வீட்டை அடைந்த பொழுது அந்தச் சிறுமி மரணத் துயிலில் துயில் கொண்டிருந்ததைக் காண்கின்றனர்; ஆனால் பாவத்தி லிருந்தும் கல்லறையிலிருந்தும் நம்மை மீட்க வந்தவர் அந்தப் பெண்ணை உயிருள்ளவளாகவும் நலமுள்ளவளாகவும் அவளது பெற்றோரின் கரங்களில் ஒப்படைத்தார்.

***6. இரண்டாம் பஸ்கா*** *(யோவான் 5:1-47).—*ஒப்பீட்டு (சுவிசேஷ) எழுத்தாளர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்ட ஒரே ஒரு பஸ்காவை மட்டுமே குறிப்பிடுகின்றனர். யோவான் 5:1ல் வரும் "பண்டிகை" என்பது பஸ்காவாயிருக்குமென்றால், மொத்தம் நான்கு பஸ்கா பண்டிகைகளை யோவான் குறிப்பிடுகின்றார். எவ்வகையிலும், தம் ஊழியத்தின் இந்த வேளையில் இயேசு எருசலேமுக்கு வருகின்றார். இதில் பெதஸ்தா குளத்தினருகில் உதவியற்ற ஒரு மனிதரைக் குணமாக்கிய நிகழ்ச்சி மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அது ஒரு ஓய்வுநாளாய் இருந்தது, மற்றும் அது பற்றிய யூதர்களின் விமர்சனம் யோவான் ஐந்தாம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள விரிவான உரைக்கு வழியமைத்தது.

***7. மேலும் ஒரு ஓய்வுநாள் விமர்சனம்*** *(மத். 12:1-14).—*கலிலேயாவுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் இயேசுவின் சீஷர்கள் ஓய்வு நாளன்று கோதுமை அல்லது வாற்கோதுமையின் கதிர்களைப் பறித்து தானியத்தை உண்பதற் காக அவற்றைக் கைகளில் கசக்கியதற்காக விமர்சிக்கப்பட்டனர். கப்பர்

நகூமிலோ அல்லது வழியில் ஏதேனும் ஒரு கிராமத்திலோ ஓய்வு நாளில் இயேசு சூம்பின கையுடைய மனிதன் ஒருவனைக் குணமாக்கியதற்காக விமர்சிக்கப்பட்டார். இந்தக் கடைசி நிகழ்ச்சியில் அவருடைய விரோதிகள் அவரைக் கொலை செய்யத் திட்டமிடுமளவுக்குச் சென்றனர், இது அவர்களின் மதத்தினுடைய சம்பிரதாயம் மற்றும் தகுதியற்ற தன்மைக்கு பலத்த ஒரு விளக்கமாக உள்ளது.

***8. பன்னிருவரும் மலைப்பிரசங்கமும்*** *(மத். 5-7).*—இயேசுவின் சொந்த ஊழியமானது வல்லமை உள்ளதாய் இருந்தது போன்றே, அது மிகவும் சுருக்கமானதாகவும் இருக்க வேண்டியதாயிற்று. அதன் செல்வாக்கு நிலைத்திருக்க வேண்டுமென்றால், அதன் மிக மேன்மையான உண்மை களுக்குச் சாட்சிகளாய் இருக்கச் (சில மனிதர்கள்) பயிற்றுவிக்கப்பட்டு, தகுதிப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இந்த நோக்கத்திற்காக, இயேசு தமது சீஷர்களின் குழுவிலிருந்து விசேஷித்த பயிற்சிக்காகவும் அறிவுறுத்துதலுக்காகவும் பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார்.[2]

இதன் பிறகு, மலைப்பிரசங்கம் என்று என்றென்றும் அறிப்படுகின்ற நிகழ்ச்சி தொடருகின்றது. இதுவே நமக்குக் கிடைத்துள்ள இயேசுவின் வெளிப்படையான உரைகளில் மிக நீண்ட தனி உரையாக உள்ளது. இது அவருடைய இராஜ்யத்தின் கொள்கைகளினுடைய மிக மேன்மையான தொகுப்புரையாக உள்ளது, இது அடிப்படையான சத்தியங்களின் உருவாக்கமாகவும், சீனாய் மலையில், தரப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கு வலிவான நேர்மாறான கருத்துருவாக்கமாகவும் உள்ளது. இது பன்னிரு வருக்கும் மற்றும் சீஷர்களின் பரந்த வட்டாரத்திற்கும் கையளிக்கப் பட்டிருந்தது, ஆனால் இது தொலைவிலிருந்தும் அருகிலிருந்தும் வந்திருந்த மிக ஏராளமான வகை ஒன்றாய்க் கலக்கப்பட்ட மக்கள் கூட்டத்திற்கு முன்னிலையில் தரப்பட்டது. பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும் மலைப்பிரசங்கமும் இயேசுவின் ஊழியத்தில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டன. நாட்டின் சட்ட போதகர்கள் அவரைப் புறக்கணித் திருந்தனர்; ஆனால் மலையின்மீது இந்நாளில் உரைகளில் இருந்த "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மறுபடி மறுபடி உரைக்கப்பட்ட கூற்று, விஷயங்களின் புதிய ஒழுங்குமுறை சமீபத்தில் இருந்தது என்பதை வெளிப்படையான கவனத்திற்குக் கொண்டு வந்தது.

## III. மூன்றாம் நிலை—உவமைகளில் போதிப்பதைத் தழுவிக் கொள்ளுதல் வரை

***1. தொடர்ந்த பிரயாசங்கள்.***—இயேசு தம் மாபெரும் ஊழியப் பணியை கப்பர்நகூமிலும் அதனைச் சுற்றிலுமிருந்த பகுதிகளிலும் தொடர்ந்து செய்தார். ரோம நூற்றுக்கதிபதியின் வேலைக்காரர் ஒருவரைக் குணப்படுத்திய நிகழ்ச்சியானது (மத். 8:5-13) அவருக்கு, புறஜாதியாரில் இருந்த மாபெரும் விசுவாசத்திற்கான விவரிப்பாகவும், அவரது இராஜ்யத் தின் உலகளாவிய தன்மைக்கான தீர்க்கதரிசனக் குறிப்பாகவும் இருந்தது.

இரண்டாம் முறையாக அவர் மரித்த ஒருவரை உயிரோடு எழுப்பினார், அதாவது நாயீன் நகர விதவையின் மகனை உயிரோடெழுப்பினார் (லூக். *7:11-17*). இயேசுவின் முழு ஊழியத்திலும் மிகவும் நெஞ்சைத் தொட்ட நிகழ்ச்சிகளில் ஒன்று இந்தக் கட்டத்திற்குரியதாக உள்ளது. பரிசேயர் ஒருவரின் உணவு மேஜையில் இயேசு அமர்ந்திருக்கையில் மனம் வருந்திய (விபசார) பெண் ஒருத்தி தனது கண்ணீரால் அவரது பாதங்களைக் கழுவி, அவற்றை விலை உயர்ந்த தைலத்தினால் அபிஷேகம் செய்வித்தாள் (லூக். *7:36-50*). விருந்திற்கு அழைத்தவரின் விமர்சனம், கடன்காரர்கள் இருவரைப் பற்றி அவரது விருந்தினரின் (இயேசுவின்) அழகிய பாடத்தைக் கொண்டு வரக் காரணமாயிற்று.

***2. யோவானைக் குறித்து இயேசுவின் சாட்சியம்*** (லூக். *7:18-35*).—இயேசு யூதேயாவை விட்டு வெளியேறியதற்கு யோவான் சிறை வைக்கப்பட்டது(ம்) ஒரு காரணமாயிருந்தது. யோவானின் கழுகுக்கொத்த ஆவியானது ஓராண்டு காலத்திற்கு சவக்கடலின் கிழக்குக் கடற்கரையில் இருந்த "கருங் குகையில்" கூண்டிலிடப்பட்டிருந்தது. அவர் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த வேளையில் வானங்கள் திறந்ததைக் கண்டிருந் தார், மற்றும் தெய்வீகக் குரலொலியைக் கேட்டிருந்தார், மற்றும் அவரை (இயேசுவை) மேசியா என்று சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் இயேசுவோ யோவான் எதிர்பார்த்திருந்த அளவுக்கு ஊழியம் செய்யாதிருந்தார். ஏரோதுகளும், பிலாத்துக்களும், காய்பாக்களும் இன்னும் அதிகாரத்தில் இருந்தனர். ஏன் அவர் நாட்டைத் தூற்றி, பதரை எரித்து, நீதியில் ஆளுகை செய்யாதிருக்கின்றார்? ஒருவேளை இப்படிப்பட்ட எண்ணங்களுடன் யோவான் இயேசுவிடத்தில் இரண்டு சீஷர்களை அனுப்பி, "வரவேண்டிய வர் நீர் தாமா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று கேட்கச் செய்திருக்கலாம். இயேசு அவர்களைத் தாம் செய்து கொண்டிருந்த உபகாரப் பணிகள் பற்றிய வார்த்தைகளுடன் அனுப்பினார், பிறகு அவர் (இயேசு) யோவான் மீது தமது உயர்வான புகழுரையை அறிவிக்கின்றார்.

***3. உவமையில் போதிப்பதைத் தழுவிக் கொள்ளுதல்*** (மத். *8*; மாற். *4:1-34*).—நாம் இயேசுவின் உவமைகளினுடைய முதல் மாபெரும் தொகுப்பை அடைந்துள்ளோம். பெரேயா ஊழியத்தில் ஒன்றும், நமது கர்த்தருடைய வெளிப்படையான ஊழியத்தின் கடைசி நாளில் ஒன்றும் ஆக இரு மாபெரும் (உவமைத்) தொகுப்புகள் கிடைக்கின்றன. உவமை வடிவை அறிமுகப்படுத்துதல் சீஷர்களுக்கு திகைப்பூட்டுவதாக இருந்தது (மத். *13:10*). இதற்குத் திறவுகோலானது வேதபாரகர் மற்றும் பரிசேயரின் பகையுணர்விலும் நம்பிக்கையற்ற மாய்மாலத்திலும் காணப்பட்டுள்ளது. உபகாரச் செயலுக்கான அற்புதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்த்தப் பட்டன; இருப்பினும் அவர்கள் அவரது வல்லமை பிசாசின் பிரபுவிட மிருந்து வந்ததாகக் குறிப்பிட்டனர் (மத். *12:22-37*), மற்றும் அதன் பிறகு அவர்கள் அவரிடத்திலிருந்து ஒரு அடையாளத்தைக்கோருமளவுக்கு வெட்கக்கேடு கொண்டிருந்தனர் (மத். *12:38-45*). இயேசு, மன்னிப்பே கிடைக்கப் பெறாத பாவமான, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் அவர்களிடம் இருந்ததைக் குறிப்பிட்டு அப்பாவத்தின் பேரளவின்

கருத்தை அவர்களுக்கு விளக்கப்படுத்தினார். ஆட்சியாளர்களுடன் மோதல்கள் பெருகுவதைத் தவிர்ப்பதற்காகவே அவர் தம் போதனையை உவமைகளினால் மூடினார், அவற்றை தனிப்பட்ட முறையில் தம்முடைய சீஷர்களுக்கு விளக்கப்படுத்தினார் (மத். 13:10-16). அவரது பாடங்களுக்கு அழகையும் வலிவையும் கூட்டுதல் என்பது ஐயத்திற்கிடமின்றி இன்னொரு காரணமாயிருந்தது. ஆனால் உவமை வடிவத்தைத் தழுவிக் கொள்ளுதல் என்பது வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரிடத்தில் வளர்ந்த வெறுப்பு உணர்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட திருப்புமுனையைக் குறிக்கின்றது.

## IV. நான்காம் நிலை—கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கம் வரை

***1. கடுங்காற்று அமர்த்தப்படுதலும் கதரேன் நாட்டிலிருந்த அசுத்த ஆவி கொண்டவர்களும்*** *(மத். 8:18-34).—உவமைகளின் நாளானது இயேசுவுக்கு மாபெரும் நாளாய் இருந்தது. அவர் அசுத்த ஆவிகளுடன், சூழ்ச்சி செய்து கொண்டிருந்த பகைவர்களுடன், தம்மை நாடிய நண்பர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தார், மற்றும் அந்த நாளை அவர் அழியாத் தன்மை கொண்ட தம்முடைய உவமைகளுடன் முடித்திருந்தார். தமது பிரயாசங் களினால் களைப்புற்ற நிலையில் அவர் சிறு கடலை (கலிலேயாக் கடலை) கடந்து செல்லும்படி கட்டளைகள் கொடுத்தார், இதுவே பதிவு செய்யப் பட்ட அவரது முதல் கடற்பயணமாக உள்ளது எனினும் இதுவே கடைசியானதல்ல. திடீரென்று எழுந்த கடுங்காற்று, வலிவார்ந்த முன்னெச்சரிக்கை, எஜமானரின் அமைதியான ஆழ்துயில், "இரையாதே, அமைதலாயிரு"[3] என்று அவர் கடலைக் கடிந்து கொண்டது மற்றும் காற்றும் அலைகளும் உடனடியாக அமைதியானது ஆகியவை மிகவும் நேர்த்தியான எளிமைத்தன்மையுடன் கூறப்பட்டுள்ளன. ஒரு அற்புதம் இன்னொரு அற்புதத்தை விடப் பெரியது என்பது உண்மையாய் இராது இருக்கலாம்; ஆனால் குறிப்பிட்ட சில அற்புதங்கள் அங்கிருந்தவர்களை/அற்புதம் செய்யப்பட்டவர்களை மற்ற அற்புதங்கள் செய்யாத அளவுக்கு பெருவியப்பிலும் பக்தியிலும் ஆழ்த்தின என்பது உண்மையாக உள்ளது. ''இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப் படிகிறதே."[4] கிழக்கு கரையில் இயேசு மனிதர்களை வியப்பில் ஆழ்த்திய இன்னொரு அற்புதத்தைச் செய்தார்.[5] அசுத்த ஆவி பிடித்திருந்த இருவர் அவரைச் சந்தித்தனர், அவர்களில் ஒருவர் அசுத்த ஆவிகளின் பெரும் படையொன்றினால் துன்புற்றிருந்தார். அசுத்த ஆவிகளால் தீவிரமாய்ப் பிடிக்கப்பட்டிருந்தவர்(கள்) ஆடையணிந்து தெளிவான மனநிலையில் இருந்ததைக் கதரேன் நாட்டினர் கண்ட பொழுது திகைப்படைந்தனர், ஆனால் தங்கள் பன்றிக் கூட்டத்தை இழந்து போனதால் அவர்கள் கோபம் அடைந்தனர்; இயேசு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மேற்குக் கரையை நோக்கி கடலை மீண்டும் கடந்து சென்றார்.*

***2. பன்னிருவரின் முதல் ஊழியம்*** *(மத். 9:35-11:1).—கலிலேயாவுக்குத்*

திரும்பிய பிறகு இயேசு தமது இளமை பருவ இல்லத்திற்கு இரண்டாவதும் கடைசி முறையுமாக வந்தார்; ஆனால் நாசரேத்தூரார் மீண்டும் ஒருமுறை அவரைப் புறக்கணித்தனர். ஊழியம் இன்னமும் செய்யப்பட வேண்டிய தாயிருந்தது. ஒருவரே செய்வதற்கு அது மிகவும் பெரியதாயிருந்தது, இப்பொழுது பிரசங்கிக்கும் கலையில் பணிப்பயிற்சி ஊழியத்தில் பன்னிருவரும் ஈடுபட வேண்டிய வேளை வந்தது. அதன்படியே அவர்கள் இருவர் இருவராக கலிலேயாவில் (ஊழியப்) பயணம் மேற்கொள்ளும் படியும், பிரசங்கித்து, அற்புதங்கள் செய்யும்படியும் அவர் கட்டளை யிட்டார். இந்த வேளையில் இயேசு தம் சொந்த ஊழியத்தைத் தொடர்ந்தார். இயேசு மற்றும் யோவான் ஆகியோரின் ஊழியத்தைப் போன்றே பன்னிருவரின் ஊழியமும் தயாரிப்பாகவே இருந்தது என்பது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கதாகும். இது இஸ்ரவேல் வீட்டாரில் இழந்து போகப்பட்ட ஆடுகளுடன் வரையறைப்படுத்தப்பட்டது, மற்றும் "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்துள்ளது"[6] என்பதே இதன் பாரமாயிருந்தது.

***3. யோவான் ஸ்நானனின் மரணம்*** *(மத். 14:1-12).—சற்றுக் காலம் முன்னதாக நடைபெற்றிருந்த யோவானின் மரணமானது இந்தத் தொடர்பில் எடுத்துரைக்கப்படுகின்றது. ஏரோது அந்திப்பா, தனது சகோதரனான பிலிப்பு உயிருடன் இருக்கும் பொழுதே, பிலிப்புவின் மனைவியாயிருந்த ஏரோதியாளை திருமணம் செய்து கொண்டிருந்தான். ஒரு ஆட்சியாளரின் பாவங்களைக் கடிந்து கொள்ள யோவான் தயங்க வில்லை. பழி பாவங்களுக்கு அஞ்சாத ஏரோதியாள் முதலில் யோவானைச் சிறைப்பிடிக்கச் செய்து பின்பு அவர் இரத்த சாட்சியாய் மரிக்கச் செய்யும் வரை ஓய்ந்திருத்தலை அறியாதிருந்தாள், அவள் ஏரோதுவையும் ஓய்ந் திருக்க விடவில்லை. இயேசுவின் வல்லமையான செயல்கள் ஏரோதுவின் காதுகளுக்கு எட்டிய பொழுது, அவன் (ஏரோது), "இவன் யோவான் ஸ்நானான்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" (மத். 14:2; இ.வ. மாற். 6:14) என்று கூறினான்.*

***4. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தலும் ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கமும்*** *(யோவான் 6).—பன்னிருவரும் கலிலேயாவில் தங்கள் ஊழியப் பயணத்திலிருந்து திரும்பி வந்தனர், இயேசு அவர்களுடன் ஓய்ந்திருக்கவும் அவர்களுக்குத் தனிப்பட்ட அறிவுறுத்தல் கொடுக்கவும் மக்கள் அதிகமற்ற கடலின் கிழக்கு பகுதியிலிருந்த மாகாணத்திற்கு வந்தார். ஆனால் இன்னமும் அவரைக் கேட்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதிற்று, அவர் இன்னமும் அவர்களுக்குப் போதித்தார். இரவு நெருங்கிக் கொண்டிருந்தது; மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்து தொலைவில் வந்திருந்தனர், உண்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லாதிருந்தது. மனிதரின் ஒவ்வொரு தேவையின் மீதும் பரிவிரக்கம் கொண்ட இயேசு ஒரு சில அப்பங்களையும் மீன்களையும் அவர்கள் யாவரும் உண்டு திருப்தியடையும் வரையிலும் பலுகிப் பெருகச் செய்தார். இது அவரது புகழின் உச்சகட்டமாய் இருந்தது. அந்தக் கூட்டத்தார் அவரை அரசராக்க விருப்பம் கொண்டனர். இது மூன்றாவது சோதனையின் திரும்புதலாய் இருந்தது. ஆனால் இயேசு*

அவ்வகையான மேசியாவாய் இருக்க மாட்டார். கூட்டத்தைக் கலைந்து போகச் செய்து விட்டு, பன்னிருவரையும் கடலைக் கடந்து செல்லும்படி கூறிவிட்டு, அவர் தனிமையில் இருப்பதற்கு மலைக்கு நழுவிச் சென்றார். பிற்பாடு இரவு வேளையில் அவர் புயலினூடே கடல்மீது நடந்து அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார். ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அற்புதம் ஒன்றுதான் எல்லா சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரே அற்புதமாக உள்ளது. இதிலிருந்து வளர்ந்ததும், கப்பர்நகூம் ஜெப ஆலயத்தில் உரைக்கப்பட்டதுமான பிரசங்கத்தை யோவான் மட்டுமே பாதுகாத்துள்ளார். அங்கு அவர் (இயேசு) தம்மையே ஜீவ அப்பம் என்று கூறுகின்றார். உற்சாகம் நிறைந்த மக்கள் கூட்டமானது அவர் தங்களின் எதிர்பார்ப்புக்குட்பட்ட வகையான மேசியா அல்ல என்பதைக் காணத் தொடங்குகின்றனர். அவர்களின் கீழான நோக்கங்களுக்கு அவர் இணங்கி யிருந்தால், ஒரு பூமிக்குரிய அரசராயிருப்பதற்கு சம்மதித்திருந்தால், அவர் உடனடியாக மிக மேன்மையான அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்க முடியும். அவர் அதற்காக வந்திருந்ததில்லை. அவரைப் பொறுத்தமட்டில் மனித குல மீட்புக்கான வழி என்பது சிலுவையின் வழியாகவே இருந்தது.

கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் செய்யப்பட்ட இந்தப் பிரசங்கமானது இயேசுவின் வாழ்வின் திருப்புமுனைகளில் இன்னொன் றைக் குறிக்கின்றது. "அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா. 6:66). வேதபாரகரும் பரிசேயரும் நீண்ட நாட்களாகவே அவரை வெறுத்து வந்தனர்; கதரேன் நாட்டினரும் நாசரேத்தூர் மனிதர்கள் அவரைப் புறக்கணித்து விட்டனர்; ஏரோது அந்திப்பா இயேசுவின்மீது அபாயகரமான ஆர்வத்தை மேற் கொள்ளத் தொடங்கியுள்ளான்; மற்றும் இப்பொழுது அவருடைய சீஷர்களே ஏமாற்றத்துடன் அவரை விட்டுப் புறம்பே திரும்பி விடுகின்றனர்.

## V. ஐந்தாம் நிலை—கூடாரப் பண்டிகையின் போது கலிலேயாவிலிருந்து கடைசியாய்ப் புறப்படுதல் வரை

***1. கால அளவு.***—இயேசு தம்முடைய ஊழியத்தின் மூன்றாவது பஸ்காவில் கலந்து கொள்ளாதிருந்தார். இது அவர் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த வேளையில் நடைபெற்றது (யோவா. 6:4). ஆகையால், கலிலேய ஊழியத்தின் இந்தக் கடைசி நிலையானது ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஆறு மாதங்களாக நீடித்தது.

***2. புதிய தோற்றங்கள்.***—இந்தக் கால கட்டமானது புதிய மற்றும் மனதில் பதியக் கூடிய வலுவான தோற்றங்களை முன் வைக்கின்றது. இது பின்வருவன வற்றின் காலகட்டமாயிருந்தது,—

*அ. அலைந்து திரிதல்.*—இயேசு, பெனிக்கியா, பாசான் மாகாணம், மற்றும் தெக்கப்போலி ஆகிய இடங்களுக்கு வரிசையாகப் பயணம் செய்தார். இருப்பினும் அவர் கலிலேயாவில் தமது ஊழியத்தை முற்றிலுமாக விட்டுவிடாதிருந்தார்.

*ஆ. தனிமைப்படுதல்.*—இயேசு கூட்டங்களை உறுதியாகத் தவிர்த்து, பன்னிருவருடன் தனிமையிலிருப்பதை நாடினார்.

*இ. தனிப்பட்ட அறிவுறுத்தல்.*—ஒரு சில அற்புதங்கள் மற்றும் ஒரு சிறிது வெளிப்படையான உபதேசங்கள் ஆகியவை பதிவு செய்யப் பட்டுள்ளன. அவர் இராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கைகளில் பன்னிருவருக்குப் பயிற்சியளித்து, நெருங்கிக் கொண்டிருந்த தம்முடைய மரணத்திற்கு அவர்களைத் தயார் செய்து கொண்டிருந்தார் (இ.வ. மத். 16:21-23; 17:9; மாற். 9:30-32).

***3. பெனிக்கே நாட்டிற்கு வருகை*** (மத். 15:21-28).—எல்லா நாடுகளி லிருந்தும் மனிதர்களை இரட்சிப்பதையே ஊழியமாகக் கொண்டிருந்த இயேசு ஒரே ஒருமுறை தாம் பிறந்த சொந்த நாட்டிற்கு அப்பால் சென்றார். இந்தப் பயணத்தில் நடைபெற்ற—சிரபோனிக்கேயப் பெண்ணின் மகளைக் குணமாக்குதல் என்ற - ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளது. பரிசேயரின் மாய்மாலம் மற்றும் கலிலேயரின் அற்பத்தனம் ஆகியவற்றிற்குப் பின் அவ்வளவு தாழ்மையான, அவ்வளவு வெற்றி கொள்ளப்பட முடியாத அவளது விசுவாசம், சற்று நிம்மதியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். தீரு, சீதோனைக் கடந்து சென்ற இயேசு தெக்கப் போலிக்கு நீண்ட சுற்று வழியாய்ச் சென்றார். இங்கு மீண்டும் ஒருமுறை அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் திரண்டது, அவர் மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு அற்புதமாய் உணவூட்டினார், இம்முறை நாலாயிரம் பேர் இருந்தனர். கடலை கடந்து, மறுபடியும் அவர் கலிலேயாவுக்குத் திரும்பினார். கலிலேய ஊழியத்தின் இந்தக் கடைசி நிலை முழுவதிலும், இயேசு ஏரோது அந்திப்பாவின் எல்லைகளுக்குப் புறம்பே விரிவாய்ப் பயணம் செய்து கொண்டிருக்கையில் அவர் இன்னமும் கலிலேயாவையே மையமாகக் கொண்டு இருந்தார். அவ்வப்போது அவர் அங்கிருந்து புறப்பட்டும், மீண்டும் அங்கு திரும்பி வந்து கொண்டும் இருந்தார்.

***4. பிலிப்புச் செசரியாவுக்கு வருதலும், மாபெரும் அறிக்கையும்*** (மத். 16).—இயேசு கலிலேயாவுக்குத் திரும்பிய பொழுது, பரிசேயர்கள் இவ்வேளையில் சதுசேயர்களால் மறுவலிவூட்டப்பட்டவர்களாகி, தங்கள் தாக்குதல்களைப் புதுப்பித்தார்கள் (மத். 16:1-4); மற்றும் இயேசு இந்தப் பயணத்தில் ஏரோது பிலிப்புவின் எல்லைகளில் செல்லுமாறு அமைத்திருக் கையில் அவர், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் ஆகியோரின் "புளித்தமா" குறித்து தம்முடைய சீஷர்களைப் பெருமிதத்துடன் எச்சரித்தார்.

இப்பொழுது அவருடைய ஊழியத்தின் முடிவு நெருங்கிக் கொண்டுள்ளது. அவர், தாம் மேசியாவாக இருப்பதாக முன் ஒரு பொழுதும் முறைப்படி உரிமைகோரியதில்லை. அவர் தாம் செய்த ஊழியங்கள், தாம் பேசிய சத்தியங்கள், தாம் வாழ்ந்த வாழ்வு ஆகியவற்றின் மூலமாக மனிதர்களின் சிந்தனையில் சத்தியமானது படிப்படியாக உதிப்பதை அனு மதித்தல் என்பதையே விரும்பித் தேர்ந்து கொண்டார். ஆனால் விளைவு களைச் சோதித்துப் பார்ப்பதற்கும், அவர்களின் அமைதியான உறுதிப் பாட்டை வெளிப்படையான அறிக்கையாக மாற்றுவதற்கும் உரியவேளை வந்துள்ளது. தனிமையான ஜெபவேளை ஒன்றிற்குப் பின் இயேசு

பன்னிருவரிடத்திலும் இரு கேள்விகளை வைக்கின்றார்:

"மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லு கிறார்கள்?"[7]

இதற்குக் கிடைத்த பல்வேறு பதில்கள், அவரையும் அவரது ஊழியத்தையும் புரிந்துணர்ந்து கொள்வதில் பொது மக்கள் எவ்வளவு முற்றாகத் தவறியிருந்தார்கள் என்பதைக் காண்பிக்கின்றது.

"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?"[8]

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"[9]

இந்த அறிக்கையின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துதல் என்பது இயலாத செயலாக உள்ளது. ஒருவேளை *அவர்களும்* கூட சத்தியத்தை தவற விட்டிருந்தார்கள் (என்போம்).

பேதுரு தாம் அங்கு பேசினார்; அவர் தமக்காக மட்டுமின்றி, பன்னிரு வருக்காகவும் பேசினார். ஆக, இயேசுவின் ஊழியம் தோல்வியடைய வில்லை என்றாயிற்று. அவர் தம்மைச் சுற்றிலுமிருந்த சிறு வட்டத்தில் தம்முடைய எதிர்கால சபைக்கான முளைக் கருவைக் கண்டார், மற்றும் அது சத்தியம் பற்றி பேதுருவின் அறிக்கை என்ற உண்மையான "அப்போஸ் தலரின் போதனை"யின் மீது கட்டப்பட்டிருக்க வேண்டியதாயிற்று. ஆனால் அந்த வேளையில் அது அறிவிக்கப்படக் கூடாது. இயேசு தமது மேசியாத்து வத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்து விட்டு, தமது மேசியாத்துவத்தில் அடங்கியுள்ளவற்றை - புறக்கணிக்கப்படுதல், மரணம், உயிர்த்தெழுதல் - அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். இன்னும் உலகப் பிரகாரமான கருத்துக்களின் சிறு பிள்ளைக்குரிய பிணைப்புகளிலேயே இருந்த பேதுரு இதை மறுக்கிறார். "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே"[10] என்பதே எஜமானரின் துரிதமான கடிந்து கொள்ளுதலாக உள்ளது; மற்றும் அதைத் தொடர்ந்து அவர் ஒரு பாடத்தைத் தருகின்றார், அது இன்னமும் அவசியமாகத் தேவைப்படுகின்றது, அந்த சீஷத்துவம் என்பது சுயத்தை மறுத்தல், கிரீடத்தை அணிந்து கொள்ளுமுன்பு சிலுவையைச் சுமத்தல் என்பதையும் அர்த்தப்படுத்துகின்றது.

***5. மறுரூபமாகுதல்*** (மத். 17:1-13).—இந்தக் காலகட்டம் முழுவதிலும் இயேசு இருள் சூழ்ந்த நிழல்களின் மத்தியில் நடந்தார்: அவருக்குப் பின்னால் கலிலேயர்களால் அவர் புறக்கணிக்கப்பட்ட நிகழ்ச்சி இருந்தது; அவருக்கு முன்னால் சிலுவை இருந்தது; இருப்பினும் அவரைச் சுற்றிலும் அசையாத/நிலையான விசுவாசம் கொண்ட சீஷர்களின் குழு இருந்தது; அவருக்கு மேலாக பிதாவின் மாற்றப்பட முடியாத அன்பு இருந்தது. கலிலேயாவில் தமது விரோதிகளை மீண்டும் எதிர்கொள்ளத் திரும்பு முன்பு மற்றும் யூதேயாவில் இருந்த மிகுந்த பகையுணர்வு கொண்ட விரோதிகளை மீண்டும் எதிர்கொள்ளத் திரும்பு முன்பு, தெய்வீக பிரசன்னத்தின் மகா மேன்மையான அடையாளம் ஒன்றும் அங்கீகாரமும் அவருக்கு அருளப் பட்டது. மறுரூபமாகும் காட்சியானது ஒரு பகுதி, சீஷர்களை நோக்கம் கொண்டதாயிருந்தது, ஆனால் பிரதானமாக அவர்களின் எஜமானரை நோக்கம் கொண்டிருந்தது. இக்காட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரால்—பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரால்—காணப்பட்டது.

*அவர் ஊக்கமான ஜெபத்தில் உள் வாங்கப்பட்டிருக்கையில், மனிதத் திரையினூடே கடந்து வந்த தெய்வீகமானது அவரது முகத்தையும் உடையையும் தெய்வீகக் கதிர்களால் அணிசெய்வித்தது. பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தரான மோசேயும், மாபெரும் சீர் திருத்தவாதியான எலியாவும் தோன்றி, எருசலேமில் வரவிருந்த அவரது (இயேசுவின்) பாடுகள் குறித்து அவருடன் பேசினார்கள்; யோர்தான் நதியில் (இயேசு ஞானஸ்நானம் பெற்ற வேளையில்) நடந்தது போலவே அங்கு ஒரு குரலொலி வந்தது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன்,"[11] என்பதுடன் "இவருக்குச் செவி கொடுங்கள்" என்பது தனிச்சிறந்த வகையில் கூட்டி உரைக்கப்பட்டது. சொல்லப் போனால் இது ஒரு குறிப்பிடத்தக்க காட்சியாய் இருந்தது. இதன் நினைவானது ஒரு அப்போஸ்தலரிடத்தில் நீண்ட நாட்களாகத் தாமதித்து/நிலைத்து இருந்தது (2 பேது. 1:16-18). தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும், பழைய உடன்படிக்கையும் மற்றும் புதியதும், வானமும் பூமியும் சந்திக்கும் நிகழ்ச்சி அங்கு நடைபெற்றது. இது இயேசுவுக்கு, ஏறக்குறைய கனியற்ற ஊழியத்திற்குப் பிதாவின் அங்கீகாரத்தினுடைய முத்திரையாகவும், முடிவு வரையில் அவர் (பிதா) இயேசுவுடன் இருப்பார் என்பதற்கான உறுதிப்பாடாகவும் இருந்தது. சீஷர்களுக்கு இது, அவர்களின் அறிக்கை ஒரு தவறாயிருந்ததில்லை அல்லது அவர்களின் நம்பிக்கை தவறான இடத்தில் வைக்கப்பட்டிருக்கப்படவில்லை என்று அர்த்தப்படுத்திற்று; இனிமேல் அவர்கள் மோசேயின் பிரமாணத்தைக் கேட்கவோ அல்லது அதைப் பிரசங்கிக்கவோ வேண்டியதில்லை, ஆனால் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கேட்டு அதையே பிரசங்கிக்க வேண்டும். ஆனால் மீண்டும் அவர்களின் உதடுகளின் மீது தற்காலிக அமைதியின் முத்திரை வைக்கப்பட்டது. இந்த தரிசனத்தின் முழுமையான முக்கியத்துவம் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றின் வெளிச்சத்தில்தான் காணப்பட முடியும். தரிசன மலையிலிருந்து இறங்கிய இயேசு சந்திரரோகியாகவும் பிசாசு பிடித்தவனாகவும் இருந்த ஒருவனைக் குணப்படுத்தினார், கப்பர்நகூமுக் குத் திரும்பி வந்தார், எருசலேமில் (தமக்கு) வரக் காத்திருந்த துன்பங்களுக்கு சீஷர்களைத் தயார் செய்வதில் இன்னமும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார்.*

***6. கலிலேய ஊழியத்தின் முடிவு.***—*இயேசு கலிலேயாவில் நீண்ட நாட்கள் தங்கி தாமதிக்கவில்லை. அங்கு அவரது மாபெரும் ஊழியம் செய்யப்பட்டிருந்தது. கூட்டங்களைத் தவிர்க்கவும், ஏதேனும் ஒரு சில அற்புதங்கள் மட்டும் செய்யவும், அவர் தம் இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மை பற்றியும் அதற்குள் பிரவேசிப்பதற்கும் கூட அவர்களுக்குத் தேவைப்படும் குழந்தைக்கொத்த தாழ்மையின் அவசியம் பற்றியும் தமது சீஷர்களின் மனதில் ஆழ்ந்த கருத்தை பதியச் செய்வதற்காக இன்னும் அதிகமாய் தம்மை அவர்களுடன் பிணைத்து பிறரிடமிருந்து விலகியிருந்து கொண்டார் (மத். 18:1-14). மாபெரும் கூடாரப் பண்டிகை சமீப மாயிருந்தது, மற்றும் அந்தச் சிறு குழுவானது சமாரியாவைக் கடந்து மீண்டும் ஒருமுறை எருசலேமுக்குச் சென்றது.*

குறிப்புகள்

[1]மத். 9:13; மாற். 2:17; லூக். 5:32. [2]அப்போஸ்தலர்களின் பெயர்ப்பட்டியல்கள் மொத்தம் நான்கு உள்ளன:

| மத்தேயு 10:2-4 | மாற்கு 3:16-19 | லூக்கா 6:14-16 | அப். 1:13 |
|---|---|---|---|
| சீமோன் பேதுரு | சீமோன் பேதுரு | சீமோன் பேதுரு | சீமோன் பேதுரு |
| அந்திரேயா | யாக்கோபு | அந்திரேயா | யாக்கோபு |
| யாக்கோபு | யோவான் | யாக்கோபு | யோவான் |
| யோவான் | அந்திரேயா | யோவான் | அந்திரேயா |
| பிலிப்பு | பிலிப்பு | பிலிப்பு | பிலிப்பு |
| பர்த்தொலொமேயு | பர்த்தொலொமேயு | பர்த்தொலொமேயு | தோமா |
| தோமா | மத்தேயு | மத்தேயு | பர்த்தொலொமேயு |
| மத்தேயு | தோமா | தோமா | மத்தேயு |
| அல்பேயுவின் மகனான யாக்கோபு | அல்பேயுவின் மகனான யாக்கோபு | அல்பேயுவின் மகனான யாக்கோபு | அல்பேயுவின் மகனான யாக்கோபு |
| ததேயு என்னும் மறுபெயர் கொண்ட லெபேயு | ததேயு | செலோத்தே எனப்பட்ட சீமோன் | செலோத்தே எனப்பட்ட சீமோன் |
| கானானியனான சீமோன் | கானானியனான சீமோன் | யாக்கோபின் சகோதரனான யூதா | யாக்கோபின் சகோதரனான யூதா |
| யூதாஸ்காரியோத் | யூதாஸ்காரியோத் | யூதாஸ்காரியோத் | — |

கவனத்திற்கு: (1) மூன்று குழுக்கள்/வகைகள் உள்ளன. (2) ஒவ்வொரு பட்டியலிலும் பேதுரு முதலாவதாகவும், பிலிப்பு இரண்டாவதாகவும் அல்பேயுவின் மகன் யாக்கோபு (அல்லது அல்பேயு) மூன்றாவதாகவும் இருக்கின்றார். (3) "செலோத்தே" என்பது "கானானியன்" என்ற அரமாயிக் வார்த்தைக்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது. (4) எல்லாப் பட்டியல்களிலும் யூதாஸ்காரியோத் கடைசியாக உள்ளார். (5) ததேயு என்பவர் அநேகமாக யாக்கோபின் சகோதரனான யூதாவாகவே இருக்கலாம்.

[3]மாற்கு 4:39; மேலும் மத். 8:26; லூக். 8:24 ஆகியவற்றைக் காணவும். [4]மத். 8:27; மேலும் மாற். 4:41; லூக். 8:25 ஆகியவற்றையும் காணவும். [5]டீன் இவ்விடத்தில் "wrought" என்று எழுதியிருந்தார். [6]மத். 3:2; 4:17; மேலும் மாற். 1:14ஆ, 15ஐயும் காணவும். [7]மத். 16:13; மேலும் மாற். 8:27; லூக். 9:18 ஆகியவற்றையும் காணவும். [8]மத். 16:15; மாற். 8:29; லூக். 9:20. [9]மத். 16:16; மேலும் மாற். 8:29; லூக். 9:20 ஆகியவற்றையும் காணவும். [10]மத். 16:23; மாற். 8:33.

[11]மத். 17:5; மேலும் மாற். 9:7; லூக். 9:35 ஆகியவற்றையும் காணவும்.